6. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.